சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 173/2022

**PW1 முகமது ஷெரீப்** **04.08.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 2ம் பிரதிவாதியோடு எழுத்துமூலமான ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் இல்லை, ஆனால் அவருடன் வாய்மொழியாக பேசப்பட்டது. எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லாத நிலையில் காவல் துறையில் 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் துறையில் 1, 2 பிரதிவாதிகள் மீது தான் புகார் கொடுத்தேன். காவல் துறையில் எழுதிக்கொடுத்த முச்சலிக்காவில் 1, 2 பிரதிவாதிகள் எந்த பணமும் தரவி்லை என்றும் நான் தான் அவருக்கு பணம் தரவேண்டும் என்று எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் எனக்கு 1, 2 பிரதிவாதிகள் எந்த பணமும் தரவில்லை. வாசாஆ 1 ன் படி கட்டிட ஒப்பந்த தொகையாக ரூ.33,40,800/- காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் பிராதில் 1, 2 பிரதிவாதிகள் ரூ 41 லட்சத்திற்கு ஒப்பந்தம் போட்டார் என கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல, ரூ 41 லட்சத்திற்கு வேலை செய்யப்பட்டுள்ளது என்று பில்கள் வழங்கியுள்ளேன். ரூ 41 லட்சத்திற்கு பில் கொடுத்ததற்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து ஒப்புதல் ஆவணம் ஏதும் பெற்றேனா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பேசப்பட்டது. தாவா உடன்படிக்கையானது வாசாஆ 1 ஆனது 20.01.2021 ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த தேதியில் தான் இருவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம் என்றால்

சரிதான். தாவா ஒப்பந்தத்தில் கண்ட முத்திரை தாள் 19.02.2021 அன்று வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் கிரய ஒப்பந்தம் 20.01.2021 ல் முடிக்கப்பட்டது. 20.02.2021 ல் எழுத்து வடிவில் எழுதிக்கொள்ளப்பட்ட ஒப்பந்தை தான் 19.02.2021 ல் முத்திரைதாள் வாங்கி அது 20.01.2021 ல் முடிக்கப்பட்ட ஒப்பந்தம் என கூறுகிறேனா என்றால் ஆமாம். அதை பிராதில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் ஒப்பந்தத்தில் ஏற்கனவே கட்டிய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டிடம் கட்டினேன் என்று கூறும் நிலையில் அதைப் பொருத்து புதிதாக ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேனா என்றால் இல்லை. நான் ஒப்பந்தத்தில் கண்டவாறு 33,40,800/-க்கு நான் 29 லட்சத்து 80 ஆயிரம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் பிராதில் சொல்லியவாறு அருகில் உள்ள சொத்தில் உள்ள நபருக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதனால் கட்டிடம் நிறுத்தப்பட்டுள்ளது என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் 50 சதவீதம் கட்டிய கட்டிடத்தை இடித்து விட்டு புதிதாக கட்டிடம் கட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் 41, 50,000/- கட்டிடம் கட்டிய வகையில் செல்வு செய்தேன் என்று கூறுவதை பொருத்து ஒரு தகுதியான பொறியாளரை வைத்து மதிப்பீட்டு சான்று பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று அதில் பொறியாளரின் உதவி பெற்று அறிக்கை ஏதேனும் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, காரணம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா ஒப்பந்தத்தில் ஒப்பந்த தேதியிலும் முத்திரை தாள் பெற்ற தேதியிலும்

முரண்பாடாக உள்ளதால் அதை வைத்து நான் பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் அது சரியல்ல. நான் முரண்பாடான ஆவணத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் 70 சதவீதம் வேலை தான் முடித்தேன் என்றும் , 1ம் பிரதிவாதி வேறு பொறியாளரை வைத்து தான் மீதி உள்ள 30 சதவீத வேலையை முடித்தார் என்றால் சரியல்ல. நான் வாங்கியுள்ள தாக சொல்லும் ரூ.29,80,000/- உண்டான வேலையை செய்யவில்லை என்றும் நான் வேலை செய்ததற்கு அதிகமான தொகைகை பற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனைத்து தொகையையும் கொடுத்துவிட்ட நிலையில் பிராது படி நான் எந்த தொகையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் மீது சட்ட நடவடிக்கை எடுத்துவிடுவார் என்ற காரணத்தினால் தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மநதமும் இல்லை என்றும் அவசியமில்லாத நபரை சேர்த்த காரணத்தினால் அந்த காரணத்திற்க்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

3ம் பிரதிவாதியை பொருத்து கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் எந்த சங்கதியும் கூற வில்லை என்று சொன்னால் அது சரிதான். எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லாத நிலையில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி